சார்பு நீதிமன்றம், பத்மனாபபுரம்

முன்னிலை: திரு. K. மாரியப்பன், பி.ஏ., பி.எல்.,

சார்பு நீதிபதி

2026-ம் ஆண்டு ஜுன் திங்கள் 5-ம் நாள் வெள்ளிக்கிழமை

**அசல் வழக்கு எண் 288/2023**

கனரா வங்கி

தக்கலை கிளைக்கு வேண்டி அதன்

பிரதிநிதி கிளை மேலாளர் மூலமாக ... வாதி

/எதிர்/

1. அம்மா ஆண்கள் சுய உதவிக்குழு -34 குழுவின் தலைவர்
G. ஜஸ்டின்
2. G. ஜஷ்டின்
3. K. சுந்தர்ராஜ்
4. S. கிங்ஸ் ராஜ்
5. R. அனிஷ்
6. K. அமோஸ்
7. P. பால்ராபின்சன்
8. A. அருள் ஜெகன்
9. S. ராஜன்
10. ஜெப டென்னிஸ் ராஜ்
11. S. மனோஜ்
12. T. உபேஷ் ராஜா
13. S. சதீஷ்
14. R. சதீஷ்
15. R. ராஜன்
16. C. ராஜகுமார்
17. R. ராஜாகோபால்
18. K. அந்தோணி சேவியர்
19. R. நெல்சன்
20. B. போஸின் லால்
21. P. அகஸ்டின் ... பிரதிவாதிகள்

இந்த வழக்கு 06.04.2026 தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. P. அசோகன், அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகளுக்கு சம்மன் சார்பு செய்தும், பிரதிவாதிகளை அழைத்தும் ஆஜராகாததால் பிரதிவாதிகளை பொறுத்து ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்பட்டும், வாதி தரப்பு வாதுரைகளை கேட்டும், வழக்காவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்தும், இதுநாள்வரையில் எனது கவனமான பரிசீலனையின்கீழ் இருந்து வந்த பின் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்:

**<u>தீர்ப்புரை</u>**

வழக்குரை தொகை ரூ.5,87,647/—ஐ 9.6% வருட வட்டியுடனும் மற்றும் வழக்கின் செலவு தொகைகளையும் பிரதிவாதிகளியிடம் இருந்தும், அவர்களது அசையும் மற்றும் அசையா சொத்துக்களில் இருந்தும் வசூலிக்க கோரி வாதி வங்கியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம்</u>**

1ம் பிரதிவாதி அம்மா ஆண்கள் சுய உதவிக்குழு —34 மற்றும் 2 முதல் 21 வரையிலான பிரதிவாதிகள் அம்மா ஆண்கள் சுய உதவிக்குழு —34 குழுவின் உறுப்பினர்கள் ஆவார்கள். மேற்படி 2வது பிரதிவாதி 1வது பிரதிவாதியான அம்மா ஆண்கள் சுய உதவிக்குழு —34 குழுவின் தலைவர் மற்றும் 1ம் பிரதிவாதியால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளாக 3 மற்றும் 4ம் பிரதிவாதிகள் ஆவார்கள். மேற்படி அம்மா ஆண்கள் சுய உதவிக்குழு —34 குழுவின் முதன்மை நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் ஆண்டுக்கு 9.6% வட்டியுடன் சுயஉதவிக்குழு திட்டத்தின் கீழ் வாதி வங்கியிடம் கடனுக்காக விண்ணப்பித்தனர். 20.03.2020ம் தேதியிட்ட கடன் விண்ணப்பத்தின் பேரில் வாதி வங்கி பிரதிவாதிகளுக்கு 29.06.2020 அன்று ரூ.10,00,000/— ஐ கடன் எண். 0923801031051 படி 60 மாத தவணைகளாக பிரதிவாதிகள் கடன் தொகையை வாதி வங்கிக்கு திருப்பி செலுத்த ஒப்புக்கொண்டு கடன் அனுமதி அளிக்கப்பட்டது. மேற்படி கடன் தொகைக்கு

பொறுப்பாக 1ம் பிரதிவாதி மற்றும் 2 முதல் 21 வரையிலான பிரதிவாதிகள் அனைவரும் சேர்ந்து கூட்டு ஒப்பந்தத்தில் 29.06.2020 அன்று கையெழுத்திட்டனர். மேலும் 1ம் பிரதிவாதியின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளாக 2 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் சுய உதவிக்குழுவிற்கு நிதியளிப்பதற்கான ஒப்பந்தத்தில் 29.06.2020 அன்று கையொப்பம் செய்து கொடுத்துள்ளார்கள். மேலும் 09.03.2023 அன்று 1ம் பிரதிவாதி அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளாக 2 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் கடன் பொறுப்புறுதியை ஒத்துக்கொண்டு அதற்கான கடன் உயிர்ப்பித்தல் கடிதத்தில் கையொப்பம் செய்து கொடுத்துள்ளார்கள். வாதி வங்கி பிரதிவாதிகளிடம் கடன் தொகையை திரும்ப செலுத்த பலமுறை எடுத்துக்கூறியும் வேண்டுமென்றே பிரதிவாதிகள் அவர்கள் ஒப்புக்கொண்ட படி கடன் தொகையை வாதி வங்கிக்கு திரும்ப செலுத்த முன்வரவில்லை. எனவே வாதியால் 03.06.2023ம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பு பிரதிவாதிகளுக்கு அனுப்பப்பட்டது. ஆனால் பிரதிவாதிகள் வாதி வங்கிக்கு கடன் தொகையை செலுத்த முன்வரவில்லை. எனவே தாவா கடன் தொகையை வட்டியுடன் வசூலிக்க கோரி வாதி வங்கியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. பிரதிவாதிகளுக்கு சம்மன் சார்பு செய்தும், பிரதிவாதிகளை அழைத்தும் ஆஜராகாததால் பிரதிவாதிகளை பொறுத்து ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்பட்டுள்ளார்கள்.

4. வாதி தரப்பில், வாதி வங்கியின் கிளை மேலாளர் திரு. அனிஷ்பாபு என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலமாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.14 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், வழக்குரையில் கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.

6. வாதி தரப்பு கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. வா.சா.1 ஆக வாதி வங்கியின் கிளை மேலாளர் விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவர் வழக்குரையில் கண்டுள்ள சங்கதிகளை ஒத்துரைத்து சாட்சியம் அளித்து வா.சா.ஆ.1 முதல் 14 வரையிலான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார். வா.சா.ஆ1–ஐ பார்வையிடும் போது 20.03.2020 ம் தேதியிட்ட கல்வி கடன் விண்ணப்பம் என்பதை அறிய முடிகிறது. வா.சா.ஆ.2 ஐ பார்வையிடும் போது 29.06.2020 ம் தேதியிட்ட கடன் அனுமதி குறிப்பாணை என்பதை அறிய முடிகிறது. வா.சா.ஆ–3 ஐ பார்வையிடும் போது 29.06.2020ம் தேதியிட்ட பிரதிவாதிகளால் நிறைவேற்றப்பட்ட கூட்டு ஒப்பந்தம் என்பதையும் அறிய முடிகிறது. வா.சா.ஆ–4 ஐ பார்வையிடும் போது 29.06.2020ம் தேதியிட்ட 2 ம் முதல் 4ம் பிரதிவாதிகளால் சுய உதவி குழுவிற்கு எழுதிக்கொடுத்த நிதியுதவி செய்வதற்கான ஒப்பந்தம் என்பது அறிய முடிகிறது. வா.சா.ஆ5 ஐ பார்வையிடும் போது 09.03.2023 ம் தேதியிட்ட 2 முதல் 4 வரையிலான பிரதிவாதிகளால் நிறைவேற்றப்பட்ட கடன் உயிர்ப்பித்தல் கடிதம் என்பது அறிய முடிகிறது. வா.சா.ஆ–6 ஐ பார்வையிடும் போது 3.06.2023ம் தேதியிட்டு கடன் தொகையை கேட்டு வாதி வங்கி பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிவிப்பு என்பது தெரிய வருகிறது. வா.சா.ஆ–7 முதல் 13 வரையிலான ஆவணங்களை பார்வையிடும் போது, 3, 10, 11, 14, 17, 7 மற்றும் 20 பிரதிவாதிகள் வழக்கறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை என்றும், 1, 2, 4, 6, 12, 13, மற்றும் 16 பிரதிவாதிகளின் வழக்கறிவிப்பு திரும்ப பெறப்பட்டது என்பது தெரிய வருகிறது. வா.சா.ஆ.14 ஐ பார்வையிடும் போது வங்கியின் கணக்கு விபரப்பட்டியல் என்பதை அறிய முடிகிறது.

7. மேலே விவாதிக்கப்பட்டதன் அடிப்படையிலும், வா.சா.ஆ.1 முதல் வ.சா.ஆ.14 வரையிலான ஆவணங்களின் மூலமாகவும், வா.சா.1–ன் சாட்சியத்தின் மூலமாகவும் வாதி வங்கியில் பிரதிவாதிகள் சுயஉதவிகுழு கடனாக ரூ.10,00,000/– பெற்றுக்கொண்டுள்ளார் என்பதையும், மேற்படி கடன் தொகைக்கு

9.6% வட்டி தருவதாகவும், 60 மாத தவணைகளாக செலுத்துவதாகவும் ஒப்புக்கொண்டுள்ளார்கள் என்பதையும், தாவா கடன் தொகையை வாதி வங்கிக்கு, பிரதிவாதிகள் செலுத்த வேண்டியதில்லை என்பதாக பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர்வாதம் செய்ய முன்வராத நிலையிலும், வாதி வங்கிக்கு பிரதிவாதிகள் ரூ.5,87,647/– வட்டியுடன் செலுத்த வேண்டியது உள்ளது என்பது வாதி வங்கி தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேற்படி கடன் தொகையை வாதி வங்கிக்கு பிரதிவாதிகள் செலுத்தவில்லையென்றும், மேற்படி கடன் தொகைக்கு நிலுவையாக ரூ.5,87,647/– இருந்து வருகிறது என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே வழக்குரை தொகை ரூ.5,87,647/– –யும் வழக்கு தாக்கல் செய்த காலத்தில் இருந்து தொகை வசூலாகும் காலம் வரை 6% வருட வட்டியுடனும், வழக்கின் செலவு தொகைகளையும் வாதி வங்கி, பிரதிவாதிகளியிடமிருந்தும், அவர்களது சொத்துக்களிலிருந்தும் வசூலித்து கொள்ள உரிமை உடையது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இறுதியாக, வாதியின் வழக்கு அனுமதிக்கப்பட்டு, வழக்குரை தொகை ரூ.5,87,647/– ஐ வழக்கு தாக்கல் செய்த காலத்தில் இருந்து தொகை முழுவதும் வசூலாகும் காலம் வரை 6% வருட வட்டியுடனும், வழக்கின் செலவு தொகைகளையும் வாதி வங்கி, பிரதிவாதிகளியிடமிருந்தும், அவர்களது சொத்துக்களிலிருந்தும் வசூலித்து கொள்ள உரிமை உடையது என்றும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தாளரிடம் சொல்லப்பட்டு, அவரால் விரிவாக்கம் செய்து தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026–ம் ஆண்டு ஜூன் திங்கள் 5 ஆம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

K MARIAPPAN

Digitally signed by K MARIAPPAN
Date: 2026.06.08 15:14:18 +0530

சார்பு நீதிபதி,
பத்மனாபபுரம்

**<u>வாதி தரப்பு சாட்சிகள்</u>/ ;**

வா.சா.1 திரு.அனிஷ்பாபு (வாதி வங்கியின் கிளை மேலாளர்)

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்</u>/ ;**

– இல்லை –

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>/ ;**

| | |
|---|---|
| வா.சா.ஆ.1 | 20.03.2020 ம் தேதியிட்ட கல்வி கடன் விண்ணப்பம் |
| வா.சாஆ.2 | 29.06.2020 ம் தேதியிட்ட கடன் அனுமதி குறிப்பாணை |
| வா.சா.ஆ.3 | 29.06.2020ம் தேதியிட்ட பிரதிவாதிகளால் நிறைவேற்றப்பட்ட கூட்டு ஒப்பந்தம் |
| வா.சா.ஆ.4 | 29.06.2020ம் தேதியிட்ட 2 ம் முதல் 4ம் பிரதிவாதிகளால் சுய உதவி குழுவிற்கு எழுதிக்கொடுத்த நிதியுதவி செய்வதற்கான ஒப்பந்தம் |
| வா.சா.ஆ.5 | 09.03.2023 ம் தேதியிட்ட 2 முதல் 4 வரையிலான பிரதிவாதிகளால் நிறைவேற்றப்பட்ட கடன் உயிர்ப்பித்தல் கடிதம் |
| வா.சா.ஆ.6 | 3.06.2023ம் தேதியிட்ட வழக்கறிவிப்பு அஞ்சலக ரசீதுடன் |
| வா.சா.ஆ.7 | 05.06.2023ம் தேதியிட்ட அஞ்சலக ஒப்புதல் அட்டை |
| வா.சா.ஆ.8 | 06.06.2023ம் தேதியிட்ட அஞ்சலக ஒப்புதல் அட்டை |
| வா.சா.ஆ.9 | 07.06.2023ம் தேதியிட்ட அஞ்சலக ஒப்புதல் அட்டை |
| வா.சா.ஆ.10 | 07.06.2023ம் தேதியிட்ட திரும்ப வந்த அறிவிப்புகள் |
| வா.சா.ஆ.11 | 08.06.2023ம் தேதியிட்ட திரும்ப வந்தஅறிவிப்புகள் |
| வா.சா.ஆ.12 | 12.026.2023ம் தேதியிட்ட திரும்ப வந்த அறிவிப்புகள் |
| வா.சா.ஆ.13 | 13.06.2023ம் தேதியிட்ட திரும்ப வந்த அறிவிப்புகள் |
| வா.சா.ஆ.14 | 01.07.2023ம் தேதியிட்ட கணக்கு விவரப்பட்டியல் |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u>/ ;**

**–இல்லை–**

K MARIAPPAN Digitally signed by K MARIAPPAN Date: 2026.06.08 15:14:27 +0530

சார்பு நீதிபதி,
பத்மனாபபுரம்